**கித்துள் அபிவிருத்திச் சபை**

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

## பதவி வெற்றிடங்கள் - ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு

கித்துள் அபிவிருத்திச் சபையில் உள்ள பின்வரும் பதவிகளுக்கான வெற்றுடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்காக இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **01. பொது முகாமையாளர் (HM 2-1)** | **01 பதவி** |
| **02. முகாமையாளர் (HM 1-1)** | **01 பதவி** |
| **03. உதவி / பிரதி முகாமையாளர் (ஆராய்ச்சி) (MM 1-1)** | **01 பதவி** |
| **04. உதவி / பிரதி முகாமையாளர் (நிர்வாகம்) (MM 1-1)** | **01 பதவி** |
| **05. நிர்வாக உத்தயோகத்தர் (JM 1-1)** | **01 பதவி** |
| **06. கணக்கு உத்தயோகத்தர் (JM 1-1)** | **01 பதவி** |
| **07. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உத்தயோகத்தர்(JM 1-1)** | **02 பதவிகள்** |
| **08. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் (MA 1-1)** | **05 பதவிகள்** |

## 01. . பொது முகாமையாளர் (HM 2-1) - 01 பதவி

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) விஞ்ஞானம் (தொடர்புடைய பாடத்துறை) / விவசாயம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் )விடயப்பரப்புக்கு உரியவாறு / வணிக நிர்வாகம் / விவசாயம் / (முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல். அல்லது முகாமைத்துவம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத்தகைமையைப் பெற்ற பின்னர், அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமையாளர் மட்டத்திலான பதவிகளில் குறைந்தபட்சம் 20 வருட அனுபவம் (இதில் குறைந்தபட்சம் 5 வருடங்களாவது சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் இருத்தல் வேண்டும்).

அல்லது

(ஆ) விஞ்ஞானம் )விடயப்பரப்புக்கு உரியவாறு ( / விவசாயம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

விஞ்ஞானம் )விடயப்பரப்புக்கு உரியவாறு ( / விவசாயம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர், அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சிறந்த சேவைப் பதிவைக் கொண்ட உத்தியோகத்தராக பணிபுரிந்த அனுபவம்.

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு :**

கித்துள் அபிவிருத்திச் சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் ஐந்து (05) வருடங்கள் உரிய விடயப்பரப்பில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

பன்முகப் பணிகளில் ஈடுபடும் குழுக்களுக்குத் தலைமைத்துவம் வழங்குவதிலும், மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதிலும் குறிப்பிட்டளவிலான தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

**சம்பளத் தொகுதி** - **HM 2-1**

**சம்பளம்** - ரூ. **140,317** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**வயது** - 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 02. முகாமையாளர் (HM 1-1) - பதவி 01

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

(அ) விஞ்ஞானம் )விடயப்பரப்புக்கு உரியவாறு ( / விவசாயம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

விஞ்ஞானம் )விடயப்பரப்புக்கு உரியவாறு ( / விவசாயம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது நிதித்துறையில் முதுகலை பட்டம் பெற்றிருத்தல் அல்லது மேற்படி விடயப் பரப்புக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமையாளர் மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

I. மேலே குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
II. முகாமைத்துவ சேவைகள் (MM) சேவை வகுதியில் தரம் I பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் உரிய விடயப் பரப்பில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளத் தொகுதி** - **HM – 1-1 2026**

**சம்பளம்** - ரூ. **123,019.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**வயது** - 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

## 03. உதவி/பிரதி முகாமையாளர் (நிர்வாகம்) (MM 1-1) – பதவி 01

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதார்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / முகாமைத்துவம் விடயப் பரப்பில் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

பதவிக்குரிய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

தகைமைகளைப் பெற்ற பின்னர் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதார்களுக்கு**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கித்துள் அபிவிருத்திச் சபையில் சேவையாற்றுபவராக இருத்தல்.

அல்லது

II. கனிஷ்ட முகாமையாளர் JM சேவை வகுதியில் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல்.

**சம்பளத் தொகுதி** - **MM – 1-1 2026**

**சம்பளம்** - ரூ. **81,710.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**வயது** - 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 04. உதவி/பிரதி முகாமையாளர் (ஆராய்ச்சி) (MM 1-1) - பதவி 01

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதார்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானப் பாடத்துறைக்குத் தொடர்புடைய விவசாயப் பாடத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

தகைமைகளைப் பெற்ற பின்னர் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதார்களுக்கு**

**I.** மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கித்துள் அபிவிருத்திச் சபையில் சேவையாற்றுபவராக இருத்தல்.

அல்லது

**II.** கனிஷ்ட முகாமையாளர் **JM** சேவை வகுதியில் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் ஐந்து **(05)** வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல்.

**சம்பளத் தொகுதி** - **MM – 1-1 2026**

**சம்பளம்** - ரூ. **81,710.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**வயது** - 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 05. நிருவாக உத்தியோகத்தர் (JM 1-1) - பதவி 01

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் விடயப் பரப்பில் பட்டம் பெற்றிருத்தல்.

**அல்லது**

பதவிக்குரிய பாடத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

II. முகாமைத்துவ உதவியாளர் 'தொழில்நுட்பம் சாரா' ( MA 1) சேவை வகுதியில் தரம் II இல் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளத் தொகுதி** - **JM – 1-1 2026**

**வயது** - 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்** - ரூ. **65,633.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 06. கணக்கு உத்தியோகத்தர் (JM 1-1) - பதவி 01

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி / கணக்கியல் / வணிக நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் பாடத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**அல்லது**

பதவிக்குரிய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

II. முகாமைத்துவ உதவியாளர் 'தொழில்நுட்பம் சாரா' (MA 1) சேவை வகுதியில் தரம் II இல் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பளத் தொகுதி - JM – 1-1 2026

வயது - 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

சம்பளம் - ரூ. **65,633.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 07. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (JM 1-1) - பதவிகள்

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் (விடயப் பரப்புக்கு உரியவாறு) / விவசாயம் / வணிக நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் பாடத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

II. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா (MA 1) சேவை வகுதியில் தரம் II இல் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பளத் தொகுதி - **JM – 1-1 2026**

**வயது** - 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்** - ரூ. **65,633.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 08. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் (MA 1-1) - பதவிகள் 05

தகைமைகளும் அனுபவமும்

- **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில்,

1. சிங்களம் / தமிழ் மொழி
2. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர)ப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அல்லது விவசாயப் பாடத்துடன் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை நீங்கலாக) சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு (04) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும்).

- **உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

**(அ)** ஆரம்பத் தரம் - தொழில்நுட்பம் சாரா, பகுதியளவு தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப சேவை வகுதிகளில் பின்வரும் (ஆ) (இ) மற்றும் (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

**(ஆ)** கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில்

i.சிங்களம் / தமிழ் மொழி

ii.கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பதுடன் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக, நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: ஏதேனும் பதவியில் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆற்றிய அல்லது ஏதேனும் பதவியில் நிரந்தரமாக நியமிப்பதற்கான நிபந்தனையாகக் கருதப்படும் பயிற்சிப் பருவகாலம், மேலே "ஈ" பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெறும் ஐந்து வருட காலப்பகுதிக்குக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. மேலும், நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆற்றிய தற்காலிக / அமய சேவைக்காலங்களும் ஐந்து வருட காலப்பகுதிக்குக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

**சம்பளத் தொகுதி** - **MA – 1-1 2026**

**வயது** - **18** வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்** - ரூ. **43,312.00** (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி2026.01.01 ஆந் திகதிக்கான சம்பளம்)

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

➢ ஏனைய நிபந்தனைகள்:

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்குரிய கடமைகளைச் சிறந்த முறையில் ஆற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்**

சுயவிபரம் மற்றும் பதவிக்குக் கோரப்பட்டுள்ள கல்வித் தகைமைகள், தொழில்முறைத் தகைமைகள் ஆகியவற்றின் விபரங்களை உள்ளடக்கியதாக, அத்தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், தற்போது அரசாங்கம் / கூட்டுத்தாபனங்கள் / சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தத்தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் மேல் இடதுபுற மூலையில் உரிய பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பிக்கும் பதவி விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(இதனுடன் இணைக்கப்பட்டுள்ள கித்துள் அபிவிருத்திச் சபையின் கனிஷ்ட முகாமையாளர் (JM) மற்றும் முகாமைத்துவ சேவைகள் (MM) வகுதிகளுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவத்தையும், கித்துள் அபிவிருத்திச் சபையின் பதவிநிலை அல்லாத சேவை வகுதிகளுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவத்தையும் பயன்படுத்தவும்.)

அனைத்து விண்ணப்பங்களும் **2026.08.12** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்:

**தலைவர், கித்துள் அபிவிருத்திச் சபை, இல. 45, புனித மைக்கல் வீதி,**
**கொழும்பு 03.**

- தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விபரங்கள் இருப்பின், அது தொடர்பில் ஆட்சேர்ப்பு அதிகாரபீடத்தினால் தீர்மானிக்கப்படும். இப்பதவி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட செல்வாக்குச் செலுத்தல்கள் தகைமையீனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
-

**தலைவர்,**

**கித்துள் அபிவிருத்திச் சபை,**

**இல. 45,**

**புனித மைக்கல் வீதி,**

**கொழும்பு 03.**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED